தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 19, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 மே 2, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்குத் தெய்வமே வரிந்து கட்டிக்கொண்டு உதவி செய்வதற்காக அவர் முன் வந்து நிற்கும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 366, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

366—

மின்மாற்றியை இடமாற்றுதல்

***8111—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் அமைக்கப்பெற்ற மின்மாற்றியை வேறு பகுதிக்கு மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் உள்ள மின்மாற்றியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு இதுநாள் வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதி காக்கவும்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மின் மாற்றியை மாற்றுவதற்கான மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்த சம்மதம் தெரிவித்து, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் விண்ணப்பம் அளித்தால், அங்கு கள ஆய்வு செய்யப்பட்டு, வைப்பு நிதி பங்களிப்பு பணிமுறையின்கீழ்,* Deposit Contribution Work *என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மதிப்பீடு தயாரிக்கப்படும். மதிப்பீட்டுத் தொகையை செலுத்திய பின்னர், சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் உள்ள மின்மாற்றி வேறு இடத்திற்கு ஒரு வாரத்திற்குள் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1½ கோடி கழகத் தொண்டர்களின் காவல் தெய்வமாய், 7 கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், காவேரி நதி நீரைப் பெற்றுத் தந்த காவேரித் தாயாய் வாழும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் வழிகாட்டி, திராவிட இயக்கத்தின் திருமகள், இன்றைய தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, நாளைய பாரதத்தின் எதிர்காலமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். சேலம் மாநகராட்சி, சிவதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மொத்தம் 1,270 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். அப்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் மின்மாற்றி*

2013 மே 2]

அமைந்துள்ளது. அப்பள்ளி மாணவ, மாணவிகள் மைதானத்தில் விளையாட்டுப் பயிற்சி பெறுவதற்கு மின்மாற்றி இடையூறாக இருப்பதால், மைதானத்தின் வெளியே மின்மாற்றியை மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மதிப்பீடு தயாரித்து, அதற்குண்டான தொகையினைச் செலுத்தினால், மின்மாற்றி மாற்றித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தப் பள்ளி மிகவும் நலிந்த பள்ளி. ஏற்கெனவே, கடந்த ஆண்டு, விண்ணப்பம் கொடுத்தபோது, மதிப்பீட்டுத் தொகையைக் கட்ட வேண்டும் என்று சொன்ன காரணத்தினால்தான், மின்மாற்றி மாற்றித் தரப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியில், கருணை உள்ளத்தோடு, மாற்றித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மேலும், சேலம் மாநகரின் மையப் பகுதியான பழைய பேருந்து நிலையம், 4 ரோடு, புதிய பேருந்து நிலையம் மற்றும் 5 ரோடு பகுதிகளுக்கு நகரின் எல்லைப் பகுதியான கருப்பூர், நெத்திமேடு, கோரிமேடு, உடையாப்பட்டி போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்ட துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் பெறப்படுவதால், குறைந்த மின் அழுத்தத்திலேயே மின்சாரம் பெறப்படுகிறது. இதனால், வீடு, தொழிற்சாலை மற்றும் வணிக வளாகங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கோ. வெங்கடாஜலம்: ஆகவே, சேலம் நகருக்குள் புதிய துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக்

கழகத்தினுடைய விதிகளிலே, ஒரு மின் மாற்றியையோ அல்லது மின் கம்பத்தையோ மாற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை, யாராக இருந்தாலும் கட்டினால்தான் மாற்ற முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நெடுஞ்சாலைத் துறையில் சாலை விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளும்போது, நெடுஞ்சாலைத் துறை, மின் வாரியத்திடம் மின் கம்பங்களை அப்புறப்படுத்தச் சொல்லி கேட்பார்கள். மின் கம்பங்களை நாங்கள் அப்புறப்படுத்தும்போது, நெடுஞ்சாலைத் துறையேதான், அது அரசுத் துறையாக இருந்தாலும்கூட மின் கம்பங்களை அகற்றுவதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை அவர்களிடமிருந்து வாங்கியபிறகுதான் மின் கம்பங்களை அகற்றுவோம். எனவே, அரசுத் துறை நிறுவனங்களாக இருந்தாலும்கூட, மதிப்பீட்டுத் தொகையைக் கட்டத்தான் வேண்டுமென்ற விதிமுறை இருக்கின்றது. ஆகவே, பள்ளி நிருவாகத்தில் இருக்கின்ற பெற்றோர், ஆசிரியர் சங்கத்திடம் பொது நிதியிருந்தால் அந்த மதிப்பீட்டுத் தொகையைக் கட்டலாம் அல்லது மாநகராட்சி மூலமாக அந்தத் தொகையைக் கட்டலாம். மாநகராட்சிப் பகுதியாக இல்லாமல், பேரூராட்சிப் பகுதியாகவோ, ஊராட்சி ஒன்றியப் பகுதியாகவோ அல்லது உள்ளாட்சிப் பகுதியாகவோ அல்லது ஒரு பஞ்சாயத்தாகவோ இருந்தாலும், ஏதாவது ஓர் உள்ளாட்சி அமைப்பிலிருந்து மதிப்பீட்டுத் தொகையைக் கட்டலாம் அல்லது உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர், அந்தப் பகுதி மக்களுடைய தேவையைக் கருதி, உங்களுடைய contribution-ஆகக்கூட மதிப்பீட்டுத் தொகையைக் கட்டலாம். ஆகவே, பணம் கட்டித்தான் மின்மாற்றிகளை மாற்ற வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், அந்த விதிமுறைகளைத் தளர்த்துவது என்பது நடைமுறைக்கு இயலாத, ஒவ்வாத காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னமும் விண்ணப்பமே கொடுக்கவில்லை. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்; விண்ணப்பம் கொடுத்து, அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையைக் கட்டினால், ஒரு வாரத்திற்குள் மின்மாற்றிகளை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீண்டும் உறுதி பட தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 2]

அதோடுமட்டுமல்லாமல், சேலம் மாநகராட்சிப் பகுதியிலே, பல்வேறு பகுதிகளைக் குறிப்பிட்டு, குறைந்த அழுத்த மின்சாரத்தினால், அந்தப் பகுதிகள் பாதிக்கப்படுகின்றன என்று இங்கே சொன்னார்கள். அதனைக் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதிகளை ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் எந்த அளவிற்கு மின் பளு தேவையிருக்கிறது, மின் பளு தேவைக்கேற்ப மின் கட்டமைப்பு வசதி செய்யப்பட்டு இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, தேவை ஏற்படின், அந்தப் பகுதியினுடைய துணை மின் நிலையங்களின் தரத்தை உயர்த்துவதற்கோ, மின் மாற்றிகளின் தரத்தைக் கூட்டுவதற்கோ அல்லது புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கோ ஆய்வுகளை மேற்கொண்டு, அதன் அடிப்படையில், தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவதாபுரம் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் உள்ள மின்மாற்றியை மாற்ற நாங்கள் முறைப்படி விண்ணப்பம் கொடுத்து, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டபின், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுக்கோளுக்கிணங்க, நானும் என்னுடைய சொந்தப் பணத்தைக் கொண்டு செலுத்தி விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வார காலத்திற்குள் மின்மாற்றிகளை மாற்றித் தருகிறேன் என்று சொல்லியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதிய துணை மின் நிலையத்தை சேலம் மையப் பகுதியில் அமைப்பதற்கு ஆய்வு செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மே 2

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வேண்டுகோளையேற்று, தானே அந்தப் பணத்தை கட்டிவிடுகிறேன் என்று சொன்ன மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு எங்கள் துறையின் சார்பாகவும், அரசின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின் மாற்றிகள், மின் கம்பங்கள் ஆகியவற்றை அகற்றுவது சம்பந்தமாக விரிவான விளக்கத்தை இங்கே அளித்திருக்கிறார்கள். நலிந்த அல்லது வருமானம் இல்லாமல் இருக்கக்கூடிய ஊராட்சிகளில் இருக்கக்கூடிய சாலைகள், குடியிருப்புகளின் நடுவில் இருக்கும் மின் கம்பங்களை மாற்றுவதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கிறது. எனவே, வருமானம் இல்லாத, மிகவும் பின்தங்கிய ஊராட்சிகளுக்காவது மதிப்பீட்டுத் தொகையைக் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன். ஏனென்றால் எங்கள் பகுதியில் அந்த வசதி கிடையாது. எனவே, எங்களுக்குச் சலுகை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் நிதி வசதி இல்லையென்று சொன்னால், சம்பந்தப்பட்ட ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒன்றியப் பகுதியிலே, ஒன்றியப் பொது நிதி இருக்கும். அந்த ஒன்றியப் பொது நிதியிலிருந்து அதைக் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்யலாம். எல்லா ஒன்றியங்களிலும் ஓரளவு பணம் இருக்கும். ஒரு மின் மாற்றியை மாற்றுவதற்குண்டான நிதி நிச்சயமாக இருக்கும். ஆகவே, ஒன்றியப் பொது நிதியிலிருந்துகூட கட்டலாம். எந்த உறுப்பினரையும் கட்டாயப்படுத்தி, அவர்களைக் கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. அதாவது, பொது நிதிகளைப் பயன்படுத்துவதற்கு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யலாம்.